அரசு பரிவோடு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

விளையாட்டு மைதானம்

***552—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் அரசுக் கலைக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்துக்கொண்டிருக்கும், நான் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது துறை தொடர்பான வினாவிற்குத் தக்க பதிலை அளிக்கிறேன்.

விடை—

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம், திரு. கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் தற்போது மாணவர்கள் பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் நான் அமர்வதற்குக் காரணமாக இருக்கின்ற கழகத்தின் நிறுவனத் தலைவரும், ஏழைகளின் பாதுகாவலன், நான் தினமும் வணங்குகின்ற தெய்வமான புரட்சிக் கலைஞர் டாக்டர் கேப்டன் அவர்களுக்கு என் நன்றியினை அவரது பொற்பாதங்களில் சமர்ப்பித்து எனது கோரிக்கையை அவைமுன் வைக்கின்றேன்.

2011 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதியில் அமைந்துள்ள அரசுக் கலைக் கல்லூரியானது, சுமார் 47 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 3,000 ஏழை மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இக்கல்லூரிக்கு எங்களது வறுமை ஒழிப்பு நாயகன் மாண்புமிகு கேப்டன் அவர்கள், சென்ற ஐந்து ஆண்டுகளில் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 42 இலட்சம் ரூபாய்க்குக் கட்டட வசதியும், நவீன முறையில் கணினி வசதியும் செய்திட நிதி ஒதுக்கி, தற்பொழுது பணிகள் முடிவடைந்துவிட்டன.

தற்பொழுது, இக்கல்லூரியின் விளையாட்டு மைதானம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. குறிப்பாக, மழைக் காலங்களில் மைதானத்திற்குள் வெள்ளம் புகுந்து, மைதானத்தைப் பாழ்படுத்தி வருகிறது. விருத்தாசலத்தில் உள்ள ஒரே விளையாட்டு மைதானம் இதுதான். இங்கு முதியோர் முதல் இளைஞர்கள் வரை காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்கின்றனர். மேலும், மாணவ, மாணவிகள் தங்களுக்கான விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதும் இந்த மைதானத்தில்தான். அதுமட்டுமல்லாமல், இங்கே உடற்பயிற்சிக் கட்டடமும் உள்ளது. ஆனால், அந்தக் கட்டடத்தில் உடற்பயிற்சிக் கருவிகள் ஒன்றுகூட இல்லை. மைதானம் முழுவதும் குண்டும் குழியுமாக இருப்பதோடு, கல், முள் போன்றவையும் இருக்கின்றன. இதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று பொதுமக்கள் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, இந்த விளையாட்டு மைதானமானது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் சீரமைக்கப்பட்டு, மேடு பள்ளங்கள் சரிசெய்யப்பட்டு, தற்பொழுது மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் உள்ளது. அவர் சொன்னதுபோல, தினமும் காலை, மாலை வேளைகளில் மாணவர்கள் மட்டுமன்றி, பொதுமக்களும் சுமார் 500–க்கும் மேற்பட்டவர்கள் இந்த விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துகிறார்கள். விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவிலும், பல்கலைக்கழக அளவிலும் கைப் பந்து, கால் பந்து, கூடைப் பந்து, கிரிக்கெட், தடகளப்*

[2011 ஆகஸ்ட் 16

போட்டி போன்ற அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழைக் காலங்களில் அங்கே தண்ணீர் தேங்குவதாகச் சொல்கிறார்கள். அதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வடிகால் அமைத்தால் நிச்சயமாகப் பயன் அளிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

சர்வீஸ் ரோடு

***862—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி–தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் துவாக்குடி–பால் பண்ணை இடையே சர்வீஸ் ரோடு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) சேவைச் சாலை அமைப்பதற்குரிய நில எடுப்புப் பணிகளை ரூ.84.50 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசின் பரிசீலனையில் உள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன் சேவைச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.